Rifle clubs in Madras City.

* 167 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Chief Minister be please dto state—

The number of Rifle Clubs that have been started in Madras City during 1969–70-71?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: சென்னை மாநகரில் 1969, 1970, 1971-ஆம் ஆண்டுகளில் துப்பாக்கி சுடும் பயிற்சிக் கழகம் எதுவும் தொடங்கப்படவில்லை.

திரு. என். டென்னிஸ்: இந்தப் பயிற்சிக் கழகங்களை ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: பயிற்சிக் கழகங்கள் என்பது வேறு, டிரெயினிங் சென்டர்ஸ் என்பது வேறு. ரைஃபிள் கிளப்ஸ் என்று இருக்கின்றன. ஏற்கனவே அவை அரசாங்க அனுமதியோடு சென்னை, கோவை, மதுரை, சேலம், கன்னியாகுமரி ஆகிய இடங்களில் நடைபெற்று வந்தன. சேலத்திலும், கன்னியாகுமரியிலும் இப்போது நடைபெறவில்லை. சென்னை, கோவை, மதுரை ஆகிய இடங்களில் நடைபெற்று வருகின்றன. டிரெயினிங் சென்டர்ஸ் 30 இடங்களில் ஏற்கனவே இயங்கி வந்தாலும் போதிய அக்கறை காட்டி பயிற்சி பெற வரவில்லை எனத் தெரிகிறது. சென்னையில் மட்டும் பயிற்சி நல்ல முறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டது போல் இந்தப் பயிற்சி நிலையங்களை விரிவுபடுத்த அரசு பரிசிலனை செய்யும்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் துப்பாக்கிப் பயிற்சி அளிக்க ஏதேனும் ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: சட்டமன்ற உறுப்பினர்கள் துப்பாக்கிப் பயிற்சி பெறலாம்; ஆனல் சட்டசபைக்குள்ளே துப்பாக்கியோடு வரக் கூடாது.

திரு. கே. டி. கே. தங்கமணி: சேலத்திலும், குமரியிலும் மூடிய கிளப்புகளை மீண்டும் திறக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அங்கு ஏற்கனவே இருந்த கிளப்புகள் மூடப்பட்டதற்குக் காரணம் போதிய அளவுக்குப் பயிற்சி பெறுவதற்கு வராத காரணத்தால்தான் நிறுத்தி வைக்கப் பட்டிருக்கிறது. போதிய அளவுக்கு உறுப்பினர்கள் வருவார்களானல், அதற்கு, அந்தப் பகுதி மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்துழைப்பார்களானல், மீண்டும் அரசு ஆவன செய்யும்.